தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

# அவசரக் கூட்டப்பொருள்

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26–ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10. 30 மணிக்கு 2008–ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. சட்டப் பேரவை அறிவிப்புகள் 2008–09ஆம் ஆண்டிற்கான அறிவிப்பு எண் 20–இல் நடப்பு ஆண்டில் நகராட்சி, மாநகராட்சிகளில் தொடங்கப்பட்டு கட்டப்பட்டு வரும் பேரூந்து நிலையங்கள் மற்றும் அலுவலக கட்டடங்களுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவாக, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேரூந்து நிலையம்/ பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலக கட்டடம் என பெயரிடப்பட வேண்டும் என்பது குறித்தும், 15–9–2008 முதல் ஒரு ஆண்டு காலத்தினை பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக நூற்றாண்டு விழாவாக கொண்டாட அறிவுறுத்தி வரப்பெற்ற அரசாணை (டி) எண் 395 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்குதுறை நாள் 16–9–2008 அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1. 2859/2009

**தீர்மானம் எண்: 51**

அலுவலகக் குறிப்புபடி பதிவு செய்யப்பட்டது

2. இம்மாநகராட்சிப் பகுதியில் பகுதி II திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள எரிவாயு தகன மேடை பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (ந.நி 3) அரசாணை எண் (நிலை) 228 நாள் 13–11–2008–இல் பின்வரும் நிபந்தனைகளுடன் பராமரிக்க அனுமதி வழங்கும் அதிகாரத்தை நகராட்சிகள் /மாநகராட்சிகளை பொறுத்த மட்டில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் பேரூராட்சிகளை பொறுத்தவரை பேரூராட்சிகள் ஆணையருக்கும் சென்னை மாநகராட்சியை பொறுத்தமட்டில் அதன் ஆணையாளருக்கும் வழங்கி அரசாணை வெளியிட்டுள்ளது.

**நிபந்தனைகள்**

1) மாநகராட்சியால் கட்டி முடிக்கப்பட்ட எரிவாயு தகனமேடை பராமரிப்பிற்கு தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மாநகராட்சி மன்ற அனுமதி பெற்று வழங்கலாம். குத்தகைக்கு விடக்கூடாது.

2) எரிவாயு மயானம் காரியங்கள் இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்த காரியங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடாது. எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்கக்கூடாது.

3) ஒளி , ஒலி பெருக்கிகளை அறக்கட்டளை/ நிறுவனம் பயன்படுத்தக் கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்பந்தமாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இதர சட்ட விதிமுறைகளுக்கும் அறக்கட்டனை/ நிறுவனம் கட்டுப்பட வேண்டும்.

4) மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே/ அறக் கட்டளையே முழுப் பொறுப்பாகும்.

5) எரியூட்டும் இயந்திர புகைப் போக்கிகள் , புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும், தக்க உயரத்திலும் மாசுகட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும்.

6) மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி தேவைப்படும் என கருதும் பட்சத்தில் மேற்படி அனுமதி மற்றும் தடையில்லா சான்றை உள்ளாட்சி சொந்த பொறுப்பில் பெற்று கொடுக்க வேண்டும்.

7) நவீன மயானத்தினை பயன்படுத்துவோர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மன்ற தலைவர்/ ஆணையாளர்/ செயல் அலுவலர் சுகாதாரப் பிரிவு அதிகாரி மற்றும் நிறுவனத்தை சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கலாம். இக்கட்டணம் லாப நோக்கமின்றி செலவுகளை சரிக்கட்டும் விதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

8) ஜாதி, மத இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது எரிவாயு மயானமாக பயன்படுத்திட வேண்டும்.

9) எரிவாயு மயானத்தை சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் மற்றும் மயானத்தை சுற்றி மதில் சுவர் எழுப்புதல் ஆகிய செலவினங்களை தனியார் அறக்கட்டளை/ நிறுவனம் ஏற்க வேண்டும்.

10) எரிவாயு மயானத்தில் அறக் கட்டளை/ நிறுவனம் எந்தவித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்படக் கூடாது.

11) எரியூட்டும் சடலம் தொடர்பாக பின் நாளில் எழும் சட்டப் பிரச்சனைகளுக்கு நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும்.

12) முதன் முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து 3 வருட காலத்திற்கு மட்டுமே எரிவாயு மயான பராமரிப்பு அறக் கட்டளை/ தனியார் நிறுவனம் பராமரிக்க அனுமதிக்கப்படும். கால நீட்டிப்பு தேவைப்படின் ஆறு மாத காலத்திற்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் புதுப்பித்து/ நிராகரித்து ஆணை பிறப்பிக்க வேண்டும்.

13) பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் கட்டுமானம் ஏதும் தேவைப்படின் உள்ளாட்சியின் அனுமதி பெற்றே வேலைகள் செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு

அனுமதி முடிந்த பிறகு திருப்பி ஒப்படைக்கும் பொழுது இதற்கு எந்ததவித இழப்பீடும் உள்ளாட்சி வழங்காது.

14) அறக் கட்டளை/ நிறுவனத்தினர் பராமரிப்பை நிறுத்தி கொள்ள விரும்பினால் மாநகராட்சி/ நகராட்சிக்கு ஆறு மாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்க வேண்டும்.

15) பராமரிப்பு அனுமதியை புதுப்பிப்பதும், மறுப்பதும் உள்ளாட்சியின் முடிவை பொறுத்தது. அனுமதி மறுக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட தனியார் அறக் கட்டளை/ தனியார் நிறுவனங்கள் தாங்கள் நிறுவிய அனைத்து கூடுதல் உபகரணங்கள்/ கட்டடங்களுக்கு எந்தவித இழப்பீடும் கோராமல் உள்ளாட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.

16) எரிவாயு மயானம் பராமரிக்க உரிமம் பெற்ற தனியார் நிறுவனம்/ அறக்கட்டளை இறந்தவரின் பெயர் தகப்பனார்/ தாயார் பெயர் வயது, முகவரி , எரிவாயு மயானம் பயன்படுத்தப்பட்ட நாள் மற்றும் நேரம் பெறப்பட்ட தொகை முதலிய விபரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.

17) மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்தப் பத்திரம் உள்ளாட்சிக்கு அறக் கட்டளை/ நிறுவனம் எழுதி கொடுக்க வேண்டும்.

18) மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்துச் செய்யப்படும்.

மேற்படி அரசாணை மற்றும் நிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) மாமன்றம் அரசாணை மற்றும் வரிசை எண் 1 முதல் 18 வரையிலான நிபந்தனைகளை பதிவு செய்யலாம்.

2) தனியார் அறக் கட்டளை அல்லது தனியார் நிறுவனங்கள் முன் வந்தால் மாமன்ற அனுமதியுடன் மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிக்க அனுமதிக்கலாம்.

இ1. 17234/2006

**<u>தீர்மானம் எண்: 52</u>**

அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது
அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது

3) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குள் ரோச் பார்க் அருகில் மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக பகுதிகளில் உள்ள பவளப் பாறைகளை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கும், பவளப் பாறை உபயோகம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் பொதுமக்களின் பார்வைக்கு விளம்பர பலகை நிறுவ வன உயிரின காப்பாளர் மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசீய காப்பகம், இராமநாதபுரம் அவர்களின் கடிதத்தில் அனுமதி கோரப்பட்டுள்ளது.

விளம்பர போர்டு நிறுவக் கோரும் இடம் வார்டு 'D' பிளாக் 2, நகரளவு எண் 2, நகரளவு ஆவணங்களின்படி சர்க்கார் புறம்போக்கு மன்னார் வளைகுடா தரிசு மற்றும் சுற்றுலா மாளிகை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இடம் கடற்கரை மேலாண்மை குழுமம் பகுதியில் 200 மீட்டர் தூரத்தில் அமைகிறது. எனவே மாவட்ட கடற்கரை மேலாண்மை திட்ட குழுமத்திடம் தடையின்மை பெற்றும், மேற்படி இடத்தின் நில உரிமையாளர் மற்றும் துறைமுக சபையிடம் தடையின்மை பெற்றும், மாவட்ட காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் தடையின்மை சான்று பெற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் விளம்பர போர்டு வைப்பதற்கு அனுமதி பெற்றுக்கொண்ட பின்னரே விளம்பர பலகை நிறுவ வேண்டும் என்ற நிபந்தனையுடன் தடையின்மை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்5. 2205/09

**<u>தீர்மானம் எண்: 53</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

4. இம்மாநகராட்சிப் பகுதி தெற்கு காட்டன் ரோடு லையன்ஸ் டவுண் 4வது தெருவிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கூடாது என திருமதி லியோனம்மாள் கொரைறா ஓ.எஸ்.எண். 188/04 என்ற எண்ணில் தொடரப்பட்ட வழக்கில் மாவட்ட உரிமையியல் முதன்மை நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பில் மேற்படி ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மேல் முறையீடு வழக்கு தொடர்வதற்கும், நிரந்தர உறுத்துக் கட்டளையை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கவும் மாமன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும், அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 29808/2008

**<u>தீர்மானம் எண்: 54</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

5. இம்மாநகராட்சி சொத்துவரி , தண்ணீர்க் கட்டணம், தொழில்வரி மற்றும் அச்சம் (ம) அறுவருக்கத் தக்க இனங்கள் ( D&O , PFA) மீதான கேட்புத் தொகைகள் பதிவு செய்து வரிவிதிப்பாளர் அனைவருக்கும் கேட்பு அட்டை புத்தகம் வழங்க வேண்டியதிருப்பதால் மேற்கண்ட விபரங்களை உள் அடக்கி கேட்பு அட்டை புத்தகம் அச்சிட்டு பெறவும் அதற்கான உத்தேசச் செலவுத்தொகை ரூ 8,00,000/– (எட்டு லட்சம் மட்டும்) த்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** அனுமதிக்கலாம்.

அ1. 6775/09

**<u>தீர்மானம் எண்: 55</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

6. இம்மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள இணை இயக்குநர் நலப் பணி அலுவலகத்தில் பணிபுரியும் திரு நா. ஆறுமுக நயினார் உடல் ஊனமுற்றவர் (மாற்றுத்திறன் உடையவர்) என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில் வரித்தொகைக்கு விலக்களிக்க கோரி உரிய சான்றுகளுடன் விண்ணப்பித்துள்ளார்.

எனவே தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டவிதி 169H ( c ) –ன்படி உடல் ஊனமுற்றவர் என்பதால் மேற்படி பணியாளர் **2008–2009/ II** ம் அரையாண்டு முதல் தொழில்வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** அனுமதிக்கலாம்.

அ15. 621/09

**<u>தீர்மானம் எண்: 56</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

7) இம்மாநகராட்சி ஆணையர் அவர்கள் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரைபடி டெல்லியில் ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி வீடு அபிவிருத்தி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு (IHSDP) திட்டத்தின் கீழ் மத்திய வீட்டுவசதிதுறை மற்றும் மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை மூலம் திட்ட ஒப்புதல் பெறும் பொருட்டு அவசர அவசியம் கருதி விமானப் பயணம் மேற்கொண்ட வகையிலும், 23.01.2009 அன்று ABAS பயிற்சியில் கலந்து கொண்ட வகையிலும் பயணப்பட்டியல் தொகை ரூ.27,709/– வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

பி4/2256/09

**<u>தீர்மானம் எண்: 57</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

8) தூத்துக்குடி மாநகராட்சி பகுதி டுவிபுரம் 5வது தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சங்கரநாராயணபிள்ளை பூங்கா மேம்பாடு செய்யப்பட்டால் அப்பகுதி மக்களும், சிறுவர்களும், மாணவர்களும் பயனடைவார்கள் என்றும், மேற்படி பூங்காவினை பராமரிப்பு பணி மேற்கொள்ள பெல்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி நிாவாகம் ஆர்வமுடையதாக உள்ளது என்றும் மாநகராட்சி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மேற்படி பூங்காவினை பராமரிப்பு செய்ய அனுமதி வழங்குமாறும் தூத்துக்குடி பெல் மெட்ரிகுலேசன் பள்ளி தாளாளர் 13.10.2008ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார்.

மேற்படி பூங்காவினை பராமரிப்பு செய்ய மேற்படி பள்ளி நிர்வாகத்திற்கு நடைமுறையில் உள்ள மாநகராட்சி நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு**: பூங்கா பராமரிப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிப்பு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ5/27784/09

**<u>தீர்மானம் எண்: 58</u>**

இப்பொருள் ஒத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டது

9) தூத்துக்குடி மாநகராட்சி வணிகவளாகத்தில் உள்ள கீழ்க்கண்ட கடைகளில் தற்போது நடத்திவரும் அனுபோகம் இல்லாத உரிமதாரர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 92 நாள் 03.07.2007ன்படி வாரிசு அடிப்படையில் பெயர் மாற்ற கட்டணம் ரூ.500/– அனுபோகம் இல்லாத உரிமதாரர்கள் 12 மாத வாடகை பெயர் மாற்ற கட்டணமும் மற்றும் 12 மாத வாடகை வைப்பு தொகை செலுத்தி உரிமம்தாரர் பெயர், பெயர் மாற்றம் செய்யக்கோரி விண்ணபித்துள்ள கீழ்க்கண்ட நபர்களின் மனு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | பழைய உரிமம்தாரர்களின் பெயர் | தற்போதைய உரிமம்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|
| 1 | பெட்டிக்கடை எண் 7 | வி.இ.ரோடு ஜிம்கானா கிளப் அருகில்<br>மா. மாரியப்பன் | ச. சண்முகக்கனி, ச.கனிராஜ்<br>219, சண்முகபுரம் வடக்கு, தூடி. |
| 2. | 10 | ஜெயராஜ் ரோடு கடை எண் 10<br>கே.பெத்துராஜா (வாரிசு) | பி.காசி ஆனந்தன்,<br>36/5பி, முனியசாமிபுரம் 5ம் தெரு, தூத்துக்குடி |

**அலுவலக குறிப்பு**:

1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 92 நாள் 03.07.2007ம் படி பட்டியலில் கண்டுள்ள வரிசை எண் 2ல் கண்டுள்ள நபர் வாரிசு அடிப்படையில் பெயர் மாற்ற கட்டணமாக ரூ.500/– 1இல் கண்டுள்ள நபர்கள் 12 மாத வாடகை பெயர் மாற்ற கட்டணமும் மற்றும் 12 மாத வாடகை முன் வைப்பு தொகை செலுத்தியுள்ளதால் கலம் எண் 2ல் கண்டுள்ள கடைகளுக்கு கலம் 3ல் கண்டுள்ள பெயரில் இருந்து கலம் எண் 4ல் கண்டுள்ள பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) கலம் 2ல் கண்டுள்ள கடை வாடகை நிலுவைக்கு கலம் 3ல் கண்டுள்ள உரிமம்தாரர்கள் பெயரில் உள்ள காலம் கடந்த வைப்பு தொகையில் உள்ள முன்வைப்பு தொகையில் ஈடு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16/24404/07

**<u>தீர்மானம் எண்: 59</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

10) தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண் 48, பிரையண்ட்நகர் 9வது தெரு கதவு எண் 26ஏ, வரிவிதிப்பு எண் 480651 என்ற கட்டிடத்தில் இந்தியன் பெந்தேகோஸ்தே சபை என்ற வழிபாட்டு தளம் செயல்பட்டு வருவதால் மின் இணைப்பு பெற சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு அளிக்க கோரப்பட்டுள்ளது.

கட்டிடம் ஆய்வு செய்யப்பட்டதில் அவ்விடத்தில் 41“ x 20“ என்ற அளவில் 820 சதுர அடி அளவுள்ள கட்டிடம் ஓட்டு கூரை கட்டிடமாகும். மேலும் மேற்படி கட்டிடம் வழிபாட்டு கூடமாகவும் செயல்பட்டு வருவதால் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு அளிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண் 48, கதவு எண் 26ஏ, பிரையண்ட்நகர் 9வது தெரு வரிவிதிப்பு எண் 480651 என்ற கட்டிடம் இந்தியன் பெந்தேகோஸ்தே சர்ச் என்ற அனைத்து தரப்பு பொதுமக்களும் வந்து செல்லக் கூடிய வழிபாட்டு கூடமாக இயங்கி வருவதால் இக்கட்டிடத்திற்கு மட்டும் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி எண் 123(a)ன்படி மேற்படி 820 சதுர அடி அளவுள்ள கட்டிடத்திற்கு மட்டும் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கலாம்.

அ5/25973/08

**<u>தீர்மானம் எண்: 60</u>**

அலுவலகக் குறிப்புபடி 820 சதுர அடி அளவுள்ள கட்டிடத்திற்கு மட்டும் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கத் தீர்மானிக்கப்பட்டது

11) இம்மாநகராட்சி தெற்கு காட்டன் ரோடு தெருவிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கோரி திரு சாந்தா குருஷ் மற்றும் மூவர் தூத்துக்குடி சப்கோர்ட்டில் I.A.No.245/08 in A.S.No.103/2008 என்ற எண்ணில் மாநகராட்சி ஆணையரை பிரதிவாதியாக குறிப்பிட்டு வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கினை எதிர்த்து திருமதி லியோனி அம்மாள் கொரைரா என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை பெஞ்ச் கிளையில் MP(MD) No.1/2008 in CRP (MD) No.2330/2008 என்ற எண்ணிடப்பட்டு தொடரப்பட்ட வழக்கில், திரு சாந்தகுருஷ் மற்றும் மூவர் 1 முதல் 4 பிரதிவாதியாகவும், ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி அவர்களை 5வது பிரதிவாதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தூத்துக்குடி சப்கோட்டில் உள்ள வழக்கிற்கு (I.A.No.245/08 in A.S.No.103/2008) இடைக்கால தடையுத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1/29808/08

**<u>தீர்மானம் எண்: 61</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

12) சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனரவர்களின் 13.02.2009ம் தேதிய கடிதத்தில் சாலைகளில் அமைக்கப்படும் நினைவு வளைவுகள் கட்டுமானங்கள் சாலைகள் மற்றும் நடைபாதையை பயன்படுத்திவோர்க்கு இடையூறாக இருக்கும் என்பதால் இத்தகைய

கட்டுமானங்களை கட்டுவதற்கு ஊக்குவிக்க வேண்டாம் எனவும் இது போன்று வரும் கோரிக்கைகளை நிராகரிக்குமாறு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்துமாறு அரசு கடித எண் 34141/மாந/6/2008–1 நாள் 19.11.2008 கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

எப்1/2380/09

**தீர்மானம் எண்: 62**

பதிவு செய்யப்பட்டது

13) ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி குடியிருப்பு மேம்பாடு மற்றும் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சிப் பகுதியில் முதல் கட்டமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 8 குடிசைப் பகுதிகளில் புதிய குடியிருப்பு கட்டுதல் மற்றும் ஏற்கனவே உள்ள குடியிருப்பை அபிவிருத்தி செய்யும் பொருட்டு தேர்வு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த 500 (400+100) பயனாளிகள் பட்டியல் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**குடிசைப்பகுதிகளின் விவரம்**

1) போல்பேட்டை டி.எம்.சி.காலனி
2) கந்தசாமிபுரம்
3) சுந்தரவேல்புரம்
4) கிருஷ்ணராஜபுரம் வார்டு எண் 6, 7
5) மங்களபுரம்
6) குருஸ்புரம்
7) திரேஸ்புரம்
8) கே.வி.கே.நகர்

**அலுவலகக் குறிப்பு:**

பயனாளிகள் பங்களிப்புத் தொகையுடன் கூடிய மான்யத்தில் புதிய குடியிருப்பு கட்டுவதற்காகவும் மேம்பாடு செய்யவும் மேற்காண் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

இ1.6385/2006

**தீர்மானம் எண்: 63**

அலுவலகக் குறிப்புபடி ஒப்புதல் அளிக்கப்பட்டது

14) தூத்துக்குடி மாநகராட்சி 2008–09ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற குடிசை பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட குடிசை பகுதிகளில் அபிவிருத்தி செய்வதற்கு ரூ.802 இலட்சம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட பணிகளை எடுத்து செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**குடிசைப்பகுதிகள் பெயர்கள்**

போல்பேட்டை, சுந்தரவேல்புரம், கிருஷ்ணராஜபுரம், கந்தசாமிபுரம், குருஸ்புரம், கே.வி.கே.நகர், திரேஸ்புரம், மற்றும் மங்களபுரம்

மேலும் மேற்கண்ட குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள், புதியதாக வீடுகள் கட்டும் பணி மற்றும் மராமத்து பணி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | | எண்ணம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | புதிய வீடுகள் கட்டும் பணி | 400 | 428.00 இலட்சம் |
| 2. | வீடுகள் மராமத்து செய்யும் பணி | 100 | 53.00 இலட்சம் |
| 3. | வார்டு எண் 39, கே.வி.கே.நகர் பகுதியில் குடிநீர் குழாய் அமைக்கும் பணி | 0.41 KM | 1.60 இலட்சம் |
| 4. | வார்டு எண் 5, சுந்தரவேல்புரம் பகுதியில் | 0.41 KM | 9.00 இலட்சம் |

| | | | |
|---|---|---|---|
| | தார்சாலை அமைக்கும் பணி | | |
| 5. | வார்டு எண் 6, கிருஷ்ணராஜபுரம் பகுதியில் தார்சாலை அமைத்தல் | 0.62 KM | 9.00 இலட்சம் |
| 6 | வார்டு எண் 4, கந்தசாமிபுரத்தில் தார்சாலை அமைக்கும் பணி | 0.44 KM | 6.00 இலட்சம் |
| 7. | வார்டு எண் 16, குருஸ்புரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 0.60 KM | 8.00 இலட்சம் |
| 8. | வார்டு எண் 39, கே.வி.கே.நகரில் தார்சாலை அமைக்கும் பணி | 0.625 | 8.00 இலட்சம் |
| 9. | வார்டு எண் 1 மற்றும் 2 போல்பேட்டை பகுதியில் தார்சாலை அமைக்கும்பணி | 0.47 KM | 8.00 இலட்சம் |
| 10. | வார்டு எண் 41, மங்களபுரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 0.27 KM | 4.55 இலட்சம் |
| 11. | வார்டு எண் 14, திரேஸ்புரத்தில் தார்தளம் அமைக்கும் பணி | 0.625 | 8.00 இலட்சம் |
| **<u>மழைநீர் வடிகால் அமைத்தல்</u>** | | | |
| 1 | வார்டு எண் 6 கிருஷ்ணராஜபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 0.25 | 3.00 இலட்சம் |
| 2. | வார்டு எண் 16 குருஸ்புரம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 0.19 | 1.70 இலட்சம் |
| 3. | வார்டு எண் 39 கே.வி.கே.நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 0.50 | 4.00 இலட்சம் |
| 4. | வார்டு எண் 14, திரேஸ்புரம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 0.63 | 8.00 இலட்சம் |
| 5. | வார்டு எண் 41, மங்களபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 0.41 | 3.30 இலட்சம் |
| **<u>திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்</u>** | | | |
| 1 | வார்டு எண் 1, 2, 4, 5, 6, 14, 16, 39 மற்றும் 41 பகுதிகளில் குப்பைகள் அள்ளும் மிதி வண்டி | 42 எண்ணம் | 8.40 இலட்சம் |
| 2 | வார்டு எண் 1, 2, 4, 5, 6, 14, 16, 39 மற்றும் 41 பகுதிகளில் குப்பைகள் அள்ளும் டம்பர் பின் வாங்கும் பணி | 46 எண்ணம் | 27.60 இலட்சம் |
| **<u>சமுதாய கூடம் கட்டுதல்</u>** | | | |
| 1 | வார்டு எண் 14 திரேஸ்புரம் பகுதியில் சமுதாய கூடம் கட்டும் பணி | 1 எண்ணம் | 26.00 இலட்சம் |
| 2 | வார்டு எண் 16, குருஸ்புரம் பகுதியில் சமுதாய கூடம் கட்டும் பணி | 1 எண்ணம் | 26.00 இலட்சம் |
| **<u>இன்பார்மர் மார்க்கெட் மற்றும் வொர்க்செட்</u>** | | | |
| | வார்டு எண் 1, 10, 14, 12 மற்றும் 14 ஆகிய பகுதிகளுக்கு இன்பார்மல் மார்க்கெட் மற்றும் ஒர்க் செட் அமைக்கும்பணி | 5 எண்ணம் | 13.20 இலட்சம் |
| **<u>தெரு விளக்குகள் அமைத்தல்</u>** | | | |
| 1 | வார்டு எண் 1, 2, 5, 6, 4, 16, 39, 14, மற்றும் 41 பகுதியில் தெருவிளக்கு அமைக்கும் பணி | 90 எண்ணம் | 6.30 இலட்சம் |
| **<u>குடிநீர் குழாய் அமைத்தல்</u>** | | | |
| | வார்டு எண் 5, 6, 4, 16, 39, 14, 1, 2 மற்றும் 41 பகுதியில் குடிநீர் குழாய் அமைத்தல் | 898 எண்ணம் | 13.47 இலட்சம் |
| **<u>பாதாளச் சாக்கடை திட்டம்</u>** | | | |
| | வார்டு எண் 5, 6, 4, 16, 39, 14, 1, 2 மற்றும் 41 பகுதியில் வாறுகால் குழாய் அமைத்தல் | 3928 எண்ணம்<br>15.7KM | 78.56 இலட்சம்<br>39.32 இலட்சம் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) புதிய குடிசைப்பகுதி வீடுகளுக்கு அரசு மானியம் ஒரு இலட்சத்திற்கு ரூ.72000/– மீதம் உள்ள தொகை பொது மக்களின் பங்களிப்பாக அனுமதிக்கலாம்.
3) மராமத்து செய்யும் வகைக்கு அரசு மானியம் ரூ.36000/– வரையும் மீதம் உள்ள தொகை வீட்டு உரிமையாளர் பங்களிப்பாகவும் அனுமதிக்கலாம்.
4) குடியிருப்பு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இ1. 6385/2006

**தீர்மானம் எண்: 64**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக் குறிப்பு 4 பதிவு செய்யப்பட்டது

15. இம்மாநகராட்சி தெற்கு பீச் ரோட்டில் (ரோச் காலனி) சர்வே வார்டு எண் **1**, பிளாக் எண் **9**, நகரளவு எண் **1139/2** பாகம் மற்றும் **1139/3**பி பாகத்தில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ./ந. ஊ.இ. எண் 889/92ல் பூங்காவிற்கு என பொது ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை குடியிருப்பு மனைகளாக மாற்றம் செய்ய உத்திரவிடப்பட்ட அரசாணை (D) எண் **84** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 23–2–1996யை ரத்துச் செய்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை (பத்தாண்டு) எண் 58 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்குதுறை நாள் 12–2–1998யை எதிர்த்து திரு சிங்கராயன் வாஸ் செயலாளர் ரோச் காலனி வெல்பர் அசோசியேசன் சங்கம் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 20797/98 & WMP Nos. 5211 and 17985/99 என்ற வழக்கினை தொடர்ந்து அதில் அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, சென்னை அவர்களை 1வது பிரதிவாதியாகவும், ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி 2வது பிரதிவாதியாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி வழக்கு 17–3–2008 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரோச் காலனி வெல்பர் அசோசியேசன் செயலாளர் திரு சிங்கராயன் வாஸ் என்பவர் மேற்படி வழக்கினை திரும்ப நடத்தக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்ததின் பேரில் வழக்கு திரும்ப நடத்துவதற்கு ஏற்று கொள்ளப்பட்டு W.P.(MP )No.878/08 in W.P.No. 20797/98 என்று எண்ணிடப்பட்டு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு ஜி. சங்கரன் அவர்களை மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1. 26270/94

**தீர்மானம் எண்: 65**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

16. இம்மாநகராட்சிப் பகுதியில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2008–09ன் கீழ் பின் வரும் பட்டியலில் கண்டுள்ள பணிகள் ரூ. 9. 80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதித்து வரப்பெற்ற தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் 16–2–2009ஆம் தேதிய நிர்வாக அனுமதி செயல்முறை ஆணை எண் அ2. 1551/08 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ,எண் | பணிகள் விபரம் | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | நிர்வாக அனுமதி தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி மாநகராட்சி டேவிஸ்புரம் ரோட்டில் கால்நடை மருத்துவ மனை கிளை நிலையம் அமைத்தல் | 3. 60 | 3. 60 |

| | | | |
|---|---|---|---|
| 2 | தூத்துக்குடி மாநகராட்சி டுவிபுரம் சங்கரநாராயணன் பூங்கா வளாகத்தில் அங்கன்வாடி மையம் கட்டுதல் | 3. 50 | 3. 50 |
| 3 | தூத்துக்குடி மாநகராட்சி அழகேசபுரம் முதல் பட்டணத்து மாடசாமி கோவில் வரை தார்சாலை அமைத்தல் | 2. 70 | 2. 70 |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்காண் செயல்முறை ஆணையிணை பதிவு செய்யலாம்.

2. இம்மாநகராட்சி சாமுவேல்புரம் அங்கன்வாடி மையம் கட்டுதல் பணியினை ரத்துச் செய்து வரப்பெற்ற தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2. 1950/08 நாள் 16–2–2009 ஐ மன்றம் பதிவு செய்யலாம்.
3. மேற்படி பணி தொடர்பாக ஏற்கனவே வழங்கப்பட்ட பணி உத்திரவினை ரத்துச் செய்யலாம்.

இ1. 8959/2008

**<u>தீர்மானம் எண்: 66</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 பதிவு செய்யப்பட்டது
அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக்கப்பட்டது

17. தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள பக்கிள் ஓடையில் ஓடையை சீரமைக்கும் பணிக்கு 17–10–2008ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை 20–12–2008 அன்று நகராட்சிகளின் நிர்வாக இயக்குநராக தலைமைப் பொறியாளர், சென்னை அவர்கள் ஆய்வு செய்யப்பட்டதில் பணி ஆரம்பிக்கும் முன்பு தேவைப்படும் இடத்தில் மணல் மூடைகள் வைத்து ( Coffer dam ) தடுப்பு அணை அமைத்து கழிவுநீரை ஒதுக்கி விட்டு பணி ஆரம்பிக்க அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

எனவே அதன் அடிப்படையில் தடுப்பு அணை அமைப்பதற்கு ரூ 5. 00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 23–01–2009 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேலும் மேற்கண்ட பணியினை பக்கிள் ஓடை சீரமைப்பிற்கு அனுமதிக்கப்பட்ட ரூ 698. 30 இலட்சம் தொகையிலேயே செய்து முடிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.

ம.ப.எண் 208/2008–09

**<u>தீர்மானம் எண்: 67</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

18. இம்மாநகராட்சிப் பொறியாளர் அவர்கள் அலுவலக பணி நிமித்தம் ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி வீடு அபிவிருத்தி மற்றும் உள் கட்டமைப்பு மேம்பாடு ( IHSDP) திட்டத்தின் கீழ் மத்திய வீட்டு வசதித்துறை மற்றும் மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை டெல்லிக்கு சென்று திட்ட ஒப்புதல் பெறுவதற்காக அவசரம் அவசியம் கருதி வான்வழிப் பயணம் மேற்கொண்டதின் பயணப்பட்டியல் தொகை ரூ **22,427/–**யை அன்னாருக்கு வழங்க மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் 2256/09/பி4

**<u>தீர்மானம் எண்: 68</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

19. இம்மாநகராட்சிப் பகுதி அண்ணாநகர் 8–ஆம் தெருவில் பக்கிள் ஓடையில் பாலம் கட்டும் பணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் செய்ய 6–2–2009ஆம் தேதியன்று மூன்றாவது அழைப்பு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக அனுமதி கடித எண் அ2. 1551/2008ல் அனுமதி வழங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) திரு ஜே. சுரேஸ் ஜெயக்குமார் | மதிப்பீட்டிற்கு ரூ. 4. 92 % அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மேற்படி பணி மூன்றாவது அழைப்பு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பட்டது. மேற்படி பணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டப் பணியாக இருப்பதாலும், மற்றும் மூன்றாவது அழைப்பாக இருப்பதாலும், வரப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் இப்பணிக்கு 2008–2009க்கு பொதுப்பணித்துறை தரவிலைப் பட்டியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேலும் தற்போது பணியின் அவசர அவசியம் கருதி பொறியர் கையேடு பக்கம் எண் 9, பத்தி எண் 2. 7. 2 –இல் தெரிவித்துள்ளபடி மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் 5 % க்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட**4. 92**% அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ம.ப.எண் 138/2008–2009

**<u>தீர்மானம் எண்: 69</u>**

அலுவலகக் குறிப்புபடி அங்கீகரிக்கப்பட்டது

20. இம்மாநகராட்சிப் பகுதி போல்டன்புரம், சுப்பையாபுரம் அரசு மருத்துவ மனை பின்புறம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி பொது நிதியின் கீழ் செய்ய 18–2–2009ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 247 நாள் 30–12–2008இல் ரூ 40,00,000/– க்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ. 7. 05 % அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 1) திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ. 4. 91 % அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு எஸ். ரம்போலா மதிப்பீட்டை விட 4. 91 % அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு 2008–2009க்கு பொதுப்பணித்துறை தரவிலைப் பட்டியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேலும் தற்போது கட்டுமான பொருட்கள் விலை உயர்ந்துள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி பொறியர் கையேடு பக்கம் எண் 9, பத்தி எண் 2. 7. 2 –இல் தெரிவித்துள்ளபடி மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் 5 % க்கு குறைவாக உள்ளதால், மதிப்பீட்டை விட **4. 91** % மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ளார். எனவே ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மப எண் 200/2008–09

**<u>தீர்மானம் எண்: 70</u>**

அலுவலகக் குறிப்புபடி அங்கீகரிக்கப்பட்டது

21. தூத்துக்குடி மாநகராட்சி பூபாலராயர்புரம் 6வது தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிக்கு 13–2–2009இல் இரண்டாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக உள்ளபடியால் Negotiation கோரப்பட்டது. ஆனால் ஒப்பந்ததாரர் விலைக்குறைப்புக்கு ஒப்புக்கொள்ளவில்லை.

எனவே மதிப்பீட்டு தொகையை விட அதிகமாகவும், வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் 4. 60% மதிப்பீட்டை விட அதிகமாக கொடுத்துள்ளார். மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் 167/2008–09

**<u>தீர்மானம் எண்: 71</u>**

அலுவலகக் குறிப்புபடி அங்கீகரிக்கப்பட்டது

22. இம்மாநகராட்சி பகுதியில் உள்ள 1) ராஜாஜி பூங்கா 2) ரோச் பூங்கா 3) கக்கன் பூங்கா ஆகிய பூங்காக்கள் மேம்பாடு செய்வதற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஈடுசெய் நிதி 2007–2008ன் கீழ் தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியின் கீழ் ரூ. 30.00 லட்சம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை எண் 49632/2007 – 3/ எல்.ஏ.3 நாள் 19–01–2009ல்இம்மாநகராட்சிக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பொருள் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | |
|---|---|
| 1) ராஜாஜி பூங்கா மேம்பாடு செய்தல் | – 24.00 லட்சம் |
| 2) ரோச் பூங்கா மேம்பாடு செய்தல் | – 23.00 லட்சம் |
| 3) கக்கன் பூங்கா மேம்பாடு செய்தல் | – 8.00 லட்சம் |

**அலுவலகக் குறிப்பு –**

1) மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்
2) மாநகராட்சி சட்டம் எண். 6 பகுதி IV ன் கீழ் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3) அரசாணை எண் **109** நாள் **1–8–2008** தேதியில் பூஙகாக்கள் மேம்படுத்துவதற்கு ரூ.**48.00** லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மன்றம் தனது தீர்மானம் எண் **106** நாள் **11–9–08**ம் தேதியில் மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தொகையினை எதிர்பார்த்து பொதுநிதியிலிருந்து செய்வதற்கு அனுமதி வழஙகப்பட்டுள்ளது.. தற்போது மானியமாக பெறப்பட்டுள்ள தொகை ரூ. **30.00** லட்சம் போக மீதம் உள்ள தொகை ரூ. **25.00** லட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கண்ட பணிக்காக செலவு செய்யலாம்.

இ1/2431/2009

**<u>தீர்மானம் எண்: 72</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

மாமன்றம், தூத்து க்குடி.
நாள் **25–02–2009**

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி